SRI V. SANKARAN: இந்த முறை திருப்திகரமான பலன் அளித்துள்ளதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: திருப்திகரமான பலன் அளித்துக்கொண்டுதான் இருக்கிறது. அதனால்தான் மேலும் மேலும் இந்த மாதிரியான நிலையங்கள் வேண்டுமென்று மக்கள் கோருகிறார்கள்.

SRI P. S. CHINNADURAI: கனம் சபாநாயகர் அவர்களே, 459-வது கேள்வியும் அதற்குக் கொடுக்கப்பட்ட பதிலும் கூடமாக இருக்கின்றன. எனவே அவைகளை கனம் அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் கேள்விதான் எனக்குப் புரியவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN: இந்த மூலக் கேள்வி பொதுப்படையாக இருக்கிறது. இந்தக் கேள்வி கால்நடைகள் சம்பந்தமாக மட்டும் போடப்பட்டிருக்கிறதா? அல்லது இது கால் கை நடைகள் சம்பந்தமாகவும் போடப்பட்டிருக்கிறதா கேள்வி இரண்டையும் உட்படுத்துகிறதா? (சிரிப்பு).

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினருக்கே இது தெரியும். கனம் அங்கத்தினர் ஏதாவது புதிய விசேஷ யோசனை கொடுக்கப் பிரியப்பட்டால் அதைக் கொடுக்கலாம். (சிரிப்பு).

Beedi Industry

*460 *Q*.— SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri D. S. Authimoolam): கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பீடித் தொழில் விஷயமாக ஏற்படுத்திய (Minimum Wages) கமிட்டி அதனுடைய ரிப்போர்ட்டை சமர்ப்பித்துவிட்டதா?

(ஆ) அதன்பேரில் எடுத்த நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) ஆம். சமர்ப்பித்துவிட்டது.

(ஆ) கமிட்டியினுடைய ரிப்போர்ட்டு இப்பொழுது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM: ரிப்போர்ட் சர்க்கார் கைக்கு வந்து எவ்வளவு நாட்கள் ஆகின்றன? இதன் மீது முடிவெடுக்க இன்னும் எவ்வளவு காலம் ஆகும்?

THE HON. SRI R. VENKATARAMAN: குறைந்த பட்சம் கூலியை நிர்ணயிக்கும்போது பக்கத்தில் உள்ள ராஜ்யங்களுடன் கலந்தாலோசித்து அதை நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறே அண்டை ராஜ்யங்களுடன் கலந்தாலோசிக்கப்படுவதால் நான்கு மாத தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI: பீடித் தொழிலாளர்களுக்கான சட்டத்தை அகில இந்திய ரீதியில் கொண்டு வர வேண்டுமென்று சமீபத்தில் மகாநாடு போடப்பட்டது. அந்தக் கூட்டத்தின் முடிவு என்ன என்று கனம் அமைச்சர் சொல்வாரா?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்தக் கேள்வியைப் பார்லிமெண்டில்தான் போடவேண்டும். இந்த விஷயம் எனக்குத் தெரியாது.